போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

OCTOBER 16, 1923.

ந. 18.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ அக்டோபர் ௴ 16௳. [விலை, 3 பை.

இந்தியா கவர்னமெண்ட் ஆக்ட்

ACT OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ட்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1923-ம் ௵ ஜூலை ௴ 31௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXXIII OF 1923.

1923-ம் ௵த்து 33-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN ARMY ACT, 1911, AND THE INDIAN LUNACY ACT, 1912, FOR CERTAIN PURPOSES.

1911-ம் ௵த்திய இந்துதேசத்து ராணுவ ஆக்டையும் 1912-ம் ௵த்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டையும் சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1911-ம் ௵த்து 8-வது ஆக்ட். 1912-ம் ௵த்து 4-வது ஆக்ட்.

1911-ம் ௵த்திய இந்துதேசத்து ராணுவ ஆக்டையும் 1912-ம் ௵த்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டையும் இதில் பின்னால் கண்ட சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1923-ம் ௵த்திய இந்துதேசத்து ராணுவ (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1911-ம் ௵த்து 8-வது ஆக்ட். 1911-ம் ௵த்து 8-வது ஆக்ட் 7-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1911-ம் ௵த்திய இந்துதேசத்து ராணுவ ஆக்ட் 7-வது பிரிவிலே,—

(a) (1) குறிப்பிட்ட பகுதியில் "அர்த்தமாகும்" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

"மேலும், இந்த ஆக்டுக்குட்பட்ட யாதொரு நபர் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களின்படி ஊழியம் செய்கையில் அவர் விஷயமாய் உபயோகிக்கப்படும்போது அதில், மஹாராஜா அவர்களுடைய ஆகாயப்படையில் கம்மிஷன் பெற்றிருக்கிற யாதொரு நபர் என்பதும் அடங்கும்"; மேலும்,

(b) (7) அடையாளமிட்ட பகுதியில், "ராணுவ ஆக்டுக்குட்பட்ட" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "ராணுவ ஆக்டுக்காவது ஆகாயப்படை ஆக்டுக்காவது உட்பட்ட" என்னும வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1911-ம் வருஷத்து 8-வது ஆக்ட் 91 A பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 91 A பிரிவுடன் அடியிற்கண்ட உட்பிரிவைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(7) பரிசோதனை அல்லது கூறுபாடு செய்து பார்த்து ரிபோர்ட் பண்ணும்படி கவர்ன்மென்டைச் சேர்ந்த யாதொரு கெமிகல் எக்ஸாமினரென்னும் ரஸாயன வஸ்து பரிசோதகருக்காகிலும் அஸிஸ்டென்ட் (உதவி) கெமிகல் எக்ஸாமினருக்காகிலும் கிரமமாய் அனுப்பப்பட்ட யாதொரு விஷயம் அல்லது வஸ்துவைக் குறித்து அவர் கையெழுத்து போட்டு எழுதிய ரிபோர்ட்டாயிருப்பதாகப் பொருள்படுகிற யாதொரு தஸ்தவேஜை இந்த ஆக்டின்படிக்கான எந்த நடவடிக்கையிலாகிலும் சாட்சியமாக உபயோகிக்கலாம்."

1911-ம் வருஷத்து 8-வது ஆக்டில் 103 A பிரிவைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

4. ஷை ஆக்ட் 8-ம் அத்தியாயத்தில் 103-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

குற்றஞ்சாட்டப்பட்டவர் பைத்தியக்காரராயிருக்கும் விஷயத்தில் நிபந்தனை.

"103 A. (1) கோர்ட் மார்ஷல் சபையாரால் யாதொரு பரிசீலனை நடத்தப்படும்போது, குற்றம் சாட்டப்பட்ட நபர் புத்திசுவாதீனமற்றவரென்றும் அதன் காரணமாக எதிர்வாதம் செய்ய சக்தியற்றவராயிருக்கிறாரென்றுமாவது, அப்படிப்பட்ட நபர் சொல்லப்பட்ட காரியத்தைச் செய்தாரென்றும் ஆனால் புத்திசுவாதீனமற்றிருப்பது காரணமாக அந்தக் காரியம் இப்படிப்பட்டதென்பதை அறிந்துகொள்ள சக்தியற்றவராயிருந்தாரென்றுமாவது, அது தப்பிதமாகவோ சட்டத்துக்கு விரோதமாகவோ இருந்ததென்றாவது ஷை சபையாருக்குத் தோற்றும்போதெல்லாம், அந்த சபையார் அப்பிரகாரமே தீர்ப்பு எழுதிவைக்கவேண்டும் ; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த சபையின் ப்ரெஸிடென்டாகிலும் பரிசீலனை நடத்தும் ஆபிஸராகிலும் - பிரஸ்தாப கேஸைக் குறித்து ஊர்ஜ்ஜிதப்படுத்துவதற்கான ஆபிஸருக்காயினும், யாதொரு கோர்ட் மார்ஷல் சபையாரின் தீர்ப்பை ஊர்ஜ்ஜிதப்படுத்தவேண்டிய அவசியமிராத விஷயத்திலே நிர்ணயிக்கப்பட்ட ஆபிஸருக்காயினும் உடனே ரிபோர்ட் செய்யவேண்டும்.

(2) ஊர்ஜ்ஜிதப்படுத்தும் எந்த ஆபிஸருக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு கேஸ் ரிபோர்ட் செய்யப்படுகிறதோ அவர் - ஷை தீர்ப்பை ஊர்ஜ்ஜிதப்படுத்தாவிட்டால், குற்றம் சாட்டப்பட்ட நபர் பிரதமத்தில் எந்தக் குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்டாரோ அந்தக் குற்றத்துக்காக அவரை அதே கோர்ட் மார்ஷல் சபையாராவது வேறொரு கோர்ட் மார்ஷல் சபையாராலாவது பரிசீலனை செய்விக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

(3) நிர்ணயிக்கப்பட்ட எந்த ஆபிஸருக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு கேஸ் ரிபோர்ட் செய்யப்படுகிறதோ அந்த ஆபிஸரும், அந்தப்படி தமக்கு ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கும் யாதொரு கேஸில் செய்யப்பட்ட தீர்ப்பை ஊர்ஜ்ஜிதப்படுத்தும் ஊர்ஜ்ஜிதப்படுத்துவதற்கான ஆபிஸரும் - குற்றம் சாட்டபட்ட நபரை நிர்ணயிக்கப்பட்ட விதமாய்க் காவலில் வைக்கவேண்டுமென்று உத்தரவு செய்வதுமல்லாமல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் உத்தரவு பெறும்பொருட்டு அந்தக் கேஸைப் பற்றி அவர்களுக்கு ரிபோர்ட் செய்யவும் வேண்டும்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ரிபோர்ட் வரப்பெற்றுக்கொள்வதன்மேல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - குற்றம் சாட்டப்பட்ட நபரைப் பைத்தியக்காரர் பாதுகாப்புச் சாலையிலாகிலும் பத்திரமாய்க் காவலில் வைத்திருப்பதற்குத் தகுதியான வேறே யாதொரு இடத்திலாகிலும் மறியல்செய்து வைக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

(5) குற்றம் சாட்டப்பட்ட யாதொரு நபர் புத்திசுவாதீனமற்றவராயிருப்பது காரணமாக எதிர்வாதம் செய்ய சக்தியற்றவராயிருக்கிறாரென்று தெரியவந்திருந்து, அவர் காவலில் வைக்கப்பட்டாலும் மறியல்செய்து வைக்கப்பட்டாலும், நிர்ணயிக்கப்பட்ட ஆபிஸரானவர்—

(a) அப்படிப்பட்ட நபர் (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி காவலில் வைக்கப்பட்டிருந்தால், அவர் எதிர்வாதம் செய்யக்கூடியவரென்று வைத்திய உத்தியோகஸ்தர் ரிபோர்ட் செய்வதன்மேலும்,

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

(b) அப்படிப்பட்ட நபர் (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி மறியல் செய்துவைக்கப்பட்டிருந்தால், 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின் 473-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஸெர்டிபிகேட்டின் மேலும், அந்த நபரை, பிரதமத்தில் அவர்மேல் எந்த குற்றம் சாட்டப்பட்டதோ அந்த குற்றத்துக்காக அதே கோர்ட் மார்ஷல் சபையாராலும் அல்லது வேறொரு கோர்ட் மார்ஷல் சபையாராலும் அந்தக் குற்றமானது ஸிவில் இலாகா சம்பந்தமான குற்றமாயிருக்கிறபட்சத்திலே யாதொரு க்ரிமினல் கோர்ட்டாராலும் பரிசீலனை செய்விக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

(6) நிர்ணயிக்கப்பட்ட ஆபிஸரால் (5) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு உத்தரவுக்கும் நகல் ஒன்றை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு உடனே அனுப்பவேண்டும்."

1912-ம் வருஷத்து 4-வது ஆக்ட். 1912-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 3, 24, 30, 35-வது பிரிவுகளில் திருத்தம்.

5. 1912-ம் வருஷத்திய இந்து தேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டிலே,—

1911-ம் வருஷத்து 8-வது ஆக்ட்.

(a) 3-வது பிரிவைச் சேர்ந்த (4) அடையாளமிட்ட பகுதியில் "30-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படியாகிலும்" என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கத்துக்கும் பிறகு "1911-ம் வருஷத்திய இந்து தேசத்து ராணுவ ஆக்ட் 103 A பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படியாகிலும்" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் ;

(b) 24-வது பிரிவில் "30-வது பிரிவின்படியாவது" என்னும் வார்த்தைக்கும் இலக்கத்துக்கும் பிறகு "1911-ம் வருஷத்திய இந்து தேசத்து ராணுவ ஆக்ட் 103 A பிரிவின்படியாவது" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் ;

(c) 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், "471-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி" என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கத்துக்கும் பர்த்தியாக "471-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படியாவது 1911-ம் வருஷத்திய இந்து தேசத்து ராணுவ ஆக்ட் 103 A பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படியாவது" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும்,

(d) 35-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், "471-வது பிரிவின்படியாவது" என்னும் வார்த்தைக்கும் இலக்கத்துக்கும் பிறகு "1911-ம் வருஷத்திய இந்து தேசத்துராணுவ ஆக்ட் 103 A பிரிவின்படியாவது" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

எல். க்ராஹம்,
இந்தியா கவர்ன்மெண்ட் அபிஷியேடிங்
ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.